**செய்தி வெளியீடு எண்: 453** **நாள்: 27.07.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**36–**வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டமானது இன்று **(27.7.2019)** காணொளி காட்சி மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள். கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் Dr.T.V.சோமநாதன், IAS அவர்களும் கலந்து கொண்டார்கள்.

சுற்றுப்புற சூழலுக்கு உகந்ததாக கருதப்படும் மின்வாகனங்கள் (Electric Vehicles) மீதான GST வரியினை நிர்ணயிப்பது தொடர்பான கருத்துருக்கள் **35–**வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மன்றத்தின் ஆணைக்கிணங்க இக்கருத்துருக்கள் மத்திய மற்றும் மாநில அலுவலர்களை கொண்ட Fitment Committee–யால் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மின்வாகனங்கள் (Electric Vehicles) மீதான GST வரியினை **12%–**லிருந்து **5%–**ஆக குறைப்பதற்கு, அவ்வாறான வாகனங்களுக்கான சார்ஜர் (EV charger) மீதான வரியினை **18%–**லிருந்து **12%–**ஆக குறைப்பது, உள்ளூர் அதிகார அமைப்புகளால் மின் பேருந்துகளை (Electric Buses) வாடகைக்கு எடுக்கும் நேர்வுகளில் GST வரியிலிருந்து விலக்களிப்பதற்கு Fitment Committee பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரைகள் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

ரூபாய் **50** இலட்சம் விற்பனை அளவு கொண்ட சிறு சேவைகள் வழங்குவோர்களுக்கு இணக்க வரி முறையில் வரி செலுத்திட **1.4.2019** முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நேர்வில், வரி செலுத்துவோர் தங்களுடைய விருப்பத்தேர்வினை அளிப்பதற்கான காலக்கெடுவானது **30.4.2019** என நிர்ணயிக்கப்பட்டது, எனினும் இந்த தேதியானது **31.7.2019** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனினும் வரி செலுத்துவோர் பயன்பெறும் வகையில் அவர்கள் விருப்பத்தேர்வினை வழங்குவதற்கான தேதியினை **30.9.2019** வரை நீட்டிப்பு செய்வது குறித்து இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும், இணக்க முறை திட்டத்தின் கீழ் வரி செலுத்துவோரால் சுய மதிப்பீட்டு வரி விவரங்கள் அடங்கிய காலாண்டு விவர அறிக்கையினை தாக்கல் செய்வதற்கான தேதியினை **31.8.2019** வரை நீட்டிப்பு செய்வது குறித்தும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தமிழகத்தால் முன்வைக்கப்பட்டு நீண்ட நாட்களாக நிலுவையிலுள்ள கீழ்க்காணும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி குறைப்பு மற்றும் வரி விலக்கு தொடர்பான கோரிக்கைகள் மீது விரைந்து முடிவு எடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் திரு D.ஜெயக்குமார் அவர்கள் இன்றைய கூட்டத்தில் வலியுறுத்தினார்கள்:–

கைத்தறி பொருட்கள்; கொள்கலனில் அடைக்கப்பட்டு வணிகச் சின்னம் இடப்பட்ட அரிசி மற்றும் இதர உணவு தானியங்கள்; ஜவ்வரிசி; தீப்பெட்டி; ஆட்டா சக்கிக்கு இணையாக கிரைண்டர் மீதான வரியினை நிர்ணயித்தல்; ஊறுகாய்; வெண்ணெய்; நெய்; விவசாயக் கருவிகள்; ஜவுளித் தொழிலில் பயன்படும் இயந்திர பாகங்கள்; பம்பு செட்டுகள்; மீன்பிடி தொழிலுக்கான உபகரணங்கள்; மரவள்ளிக் கிழங்கு ஸ்டார்ச்; வணிக சின்னமிடப்படாத நொறுக்கு தீனிகள்; பேக்கரி பொருட்கள் மற்றும் குளிர்பானங்கள்; பல்வேறு வகையான வத்தல்கள்; மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தக்கூடிய கருவிகள்; பிஸ்கட்டுகள்; உரம், நுண் ஊட்டச் சத்துகள், இயற்கை உரங்கள், பூச்சி கொல்லிகள் மற்றும் பூஞ்சை கொல்லிகள்; கற்பூரம்; காய்ந்த மிளகாய், வெந்தயம், தனியா, மஞ்சள் போன்றவை மற்றும் அதன் பொடிகள்; சீயக்காய்; கடித உறை, அட்டைகள், டயரிகள் பயிற்சி குறிப்பு மற்றும் கணக்கு புத்தகம் போன்ற காகிதப் பொருட்கள்; பாலியஸ்டர்/நாரினால் ஆன நெய்யப்படாத பைகள்; காதிப் பொருட்கள்; கழிவு செய்யப்பட்ட டயர்கள்; வெளுப்பதற்கான திரவம்; பவானி தரைவிரிப்பு; கட்டுமானப் பொருட்கள்; ஜிப்பர் பாகங்கள்; மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்; வேப்பம் பிண்ணாக்கு; அரிசி தவிடு மீது வரி விலக்கு அல்லது எதிரிடை கட்டணமாக மாற்றல்; வெள்ளி மெட்டி, தாலி போன்றவை; அலுமினிய பாத்திரங்கள் மற்றும் அலுமினிய கழிவுகள்; பட்டு நூல் மற்றும் சரிகை; தேங்காய் நார் பொருட்கள்; செங்கல் மீது இணக்க முறையில் வரி செலுத்துதல்; இரப்பர் கலந்த நாரினால் செய்யப்பட்ட மெத்தைகள்; பேக்கரியில் பயன்படும் ஈஸ்ட்; மெல்லும் புகையிலை மற்றும் சுருட்டு; கொள்கலனில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள்; கோவில்களில் உபயோகிக்கப்படும் வாகனம், தேர், திருவட்சி ஆகியவை; கொசு அழிப்பான்கள்; மொறுமொறுப்பான ரொட்டித்துண்டு (ரஸ்க்); நன்னாரி சர்பத்; பனஞ்சர்க்கரை; வறுத்த கடலை; பப்பாளி மிட்டாய்; காலர் துணி; கோவா மற்றும் பால்பேடா; சாம்பிராணி; பனைநார் மற்றும் மட்டைகள்; கோரைப் பாய், பனை, தென்னை, பாக்கு, பேரிச்சம், வாழை போன்ற இலைகளிலிருந்து தயாரிக்கப்படும் தட்டு, குவளை, தொன்னை, பானை போன்ற பொருட்கள்; பயோ டீசல்; சல்லா துணி மற்றும் கட்டு போடும் துணி; துணி பை; மெழுகுவர்த்திகள்; சங்கு மற்றும் கடல் சிப்பியாலான கைவினைப் பொருட்கள்; ரயில்

வாகனம் மற்றும் பாகங்கள் வினியோகம் மீதான உள்ளீட்டு வரி வரவினை அனுமதித்தல்; கையால் செய்யப்பட்ட இரும்பு பெட்டி; கையால் செய்யப்பட்ட பூட்டு; வாகன உதிரி பாகங்கள்; பனிக்கூழ் போல் குளிர் பானங்களையும் இணக்கமுறை வரிவிதிப்பில் எதிர்மறை பட்டியலில் சேர்த்தல்; விவசாய நடவடிக்கைகள் தொடர்பான சேவைகளுக்கு வரி விலக்களித்தல்; மாநில மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு விலக்களித்தல்; காப்பீடு மீதான வரி குறைத்தல்; பொறியியல் கூறுகள் தொடர்பான வேலைகளுக்கு வரி குறைத்தல்; வெளிப்புற கேட்டரிங் சேவைகளுக்கு வரி குறைத்தல்; சிட் நிதி சேவைகளுக்கு விலக்களித்தல்; ராமகிருஷ்ணா மிஷன் சம்மந்தமான கழகங்களுக்கு வரி குறைத்தல்; தனியார் வாகனம் உரிமையாளர்களால் பயன்படுத்தப்படும் ஓட்டுநர் சேவைகளுக்கு வரி குறைத்தல்; நெல் குற்றுகை சேவைகளுக்கு வரி விலக்களித்தல்; நுண்நீர் பாசன கருவிகளுக்கு வரிவிலக்கு; மற்றும் சிறப்பு பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றிற்கு வரி விலக்கு.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

**36–**வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டமானது இன்று **(27.7.2019)** காணொளி காட்சி மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள். கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் Dr.T.V.சோமநாதன், IAS அவர்களும் கலந்து கொண்டார்கள்.